பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

19 05 2022 6 30

வியாழக்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. புதிய இந்தியாவை உருவாக்குவதற்கு இளையோர் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தோல் துறையில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. போலி மருத்துவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் எச்சரித்துள்ளார்.

4. புதிய மகளிர் கொள்கையை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று வெள்ளிப் பதக்கம் வென்றது.

---- *இனி விரிவான செய்திகள்*----

புதிய இந்தியாவை உருவாக்குவதற்கு இளையோர் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

குஜராத்தில் சுவாமி நாராயண் கோயில் நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளையோர் முகாமில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கோவிட் தடுப்பூசி உற்பத்தி தொடங்கி அதன் விநியோகம் வரை உலக நாடுகள் நமது திறனை தற்போது அறிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மென்பொருள் தொடங்கி விண்வெளி வரையிலான அனைத்து துறைகளிலும் உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

அரசு நிர்வாகம் தற்போது மக்களின் பங்களிப்போடு செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

{}><><><><{}

தோல் துறையில் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சி மையத்தின் பவள விழா கொண்டாட்ட நிகழ்ச்சியில் இன்று கலந்து கொண்டு அவர் பேசினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த தோல் பொருட்களை உருவாக்கும் புத்தாக்க தொழில்நிறுவனங்களுக்கு அறிவியல் தொழில்நுட்பத் துறை நிதியுதவி வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முப்பரிமாண தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற காலணிகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக 73 மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

{}><><><{}

பிரதமர் திரு நரேந்திர மோடி மத்தியில் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்திருப்பதாக சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திரு முக்தார் அப்பாஸ் நக்வி கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சியை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாடுமுழுவதும் உள்ள கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நமது கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பாதுகாப்பதில் இதுபோன்ற கண்காட்சிகள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கோவிட் காரணமாக ஏற்பட்ட சவாலான சூழ்நிலைகளை பிரதமர் வாய்ப்புகளாக மாற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

கோவிட் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக பிரதமர் அறிவித்த திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

{}><><><{}

நாடுமுழுவதும் 8 ஆயிரத்து 700 —க்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இந்த மருந்தகங்களில் குறைந்த செலவில் தரமான மருந்துகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்று கூறியுள்ளார்.

அனைத்துத் தரப்பினருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவைகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் செயல்பட்டு வருவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா அதில் குறிப்பிட்டுள்ளார்.

{}><><><{}

போலி மருத்துவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார். இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் 52 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

{}><><><{}

நவீன நகர திட்டத்தின் கீழ் மதுரையில் 900 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார். இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்றார்.

மதுரை கோரிப்பாளையம் மேம்பால ஒப்பந்தத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

{}><><><{}

புதிய மகளிர் கொள்கையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளதாக சமூக நலத் துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் கூறியுள்ளார். தஞ்சாவூர் மாவட்டம் பாளையப்பட்டி கிராமத்தில் அங்கன்வாடி கட்டிடத்தை திறந்து வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து புகார் தெரிவிப்பதற்கென தொலைபேசி சேவை செயல்பாட்டில் உள்ளதாக அவர் கூறினார். முதியோர் நலனுக்கு தமிழக அரசு உயர்முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திருமதி கீதாஜீவன் தெரிவித்தார்.

{}><><><{}

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக கோவிட் பாதிப்புக்கு பின்னர் பொருளாதாரம் புத்துயிர் பெற்றுள்ளதாக பிஜேபி தலைவர் திரு ஜே பி நட்டா கூறியுள்ளார். சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 12 முதல் 13 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

{}><><><{}

அஇஅதிமுக ஆட்சிமன்றக் குழு கூட்டம் தற்போது சென்னையில் நடைபெற்று வருகிறது. அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு ஓ பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்று வரும் இந்தக் கூட்டத்தில் மாநிலங்களவை தேர்தலுக்கான வேட்பாளர்களை இறுதி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

{}><><><{}

தமிழகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விலை உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்காதது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். விலை உயர்வு கட்டுப்படுத்தப்படும் வரை நியாயவிலைக் கடைகளில் சமையல் பொருட்கள் தொகுப்பு மானிய விலையில் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

{}><><><{}

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. கன்னியாகுமரி, தென்காசி, நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லட்சத்தீவு, கர்நாடகா, கேரளா கடலோரப் பகுதிகள் மற்றும் அதனையொட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரி கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

{}><><><{}

*மாவட்டச் செய்திகள்*

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே வனப் பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த மலைப்பாம்பை கிராம மக்கள் பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

{}><><><{}

திண்டுக்கல் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் காலியாக உள்ள பகுதிநேர தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்தவர்கள் வரும் 30 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திரு விசாகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

{}><><><{}

தேனி மாவட்டத்தில் கப்பலோட்டிய தமிழன் வஉசி-யின் நகரும் புகைப்படக் கண்காட்சியினை ஆட்சியர் திரு முரளிதரன் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

{}><><><{}

திருப்பத்தூர் மாவட்டம் நாமஸ்மேடு பகுதியில் வசித்து வரும் நரிக்குறவர்களை இன்று சந்தித்த ஆட்சியர் திரு அமர் குஷ்வாகா அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

{}><><><{}

மயிலாடுதுறை மாவட்டத்தில் காவல்துறை கண்காணிப்பு அலுவலகம் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தை காவலர் வீட்டு வசதி வாரிய டிஜிபி திரு விஸ்வநாதன் இன்று ஆய்வு செய்தார்.

{}><><><{}

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று வெள்ளிப் பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 50 மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சூரிய பிரதாப் சிங் - சம்ரா இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 13 தங்கம், 15 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

{}><><><{}

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று வெள்ளிப்பதக்கம் வென்றது.

தென்கொரியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது,

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் மோகன் பரத்வாஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

{}><><><{}

ப்ரோ லீக் ஹாக்கிப்போட்டியில் பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அமித் ரோஹிதாஸ் தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

**{}><><><><{}**

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 21-13 என்ற செட் கணக்கில் கொரியாவின் **Sim Yu Jin** - ஐ வென்றார்.

**{}>*End of News*<{}**